# பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**2அரசர்கள் 5:14-17, 2திமொத்தேயு 2:8-13, லூக்கா 17:11-19**

## திருப்பலி முன்னுரை:

நன்றியுள்ளவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவரின் உதவியை நம்பிக்கையோடு கேட்கவும், பெற்ற நன்மைகளுக்கு முழு மனதுடன் நன்றி செலுத்தவும் இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. அற்புதங்களுக்காகவும், அதிசயங்களுக்காகவும் மட்டும் கடவுளைத் தேடுவது சரியல்ல என்பதை உணர நாம் அழைக்கப்படுகிறோம். நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அல்ல, இறைவனின் விருப்பத்தை முதன்மையாக நிறை வேற்ற இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். குணமடைந்த பத்து தொழுநோயாளர்களில் சமாரியரான ஒருவர் மட்டுமே திரும்பி வந்து இயேசுவுக்கு நன்றி செலுத்தினார். ”மற்ற ஒன்பது பேர் எங்கே?” என்ற இயேசுவின் கேள்வி அவர் நன்றியை எதிர்ப்பார்ப்பவர் என் பதை நமக்குத் தெளிவாக்குகிறது. இறைவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நன்றி மறக்காதவர்களாய் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. நன்மைகளின் நாயகரே இறைவா,**

திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது பணியைச் செய்வதில் தளரா மனதுடன் செயலாற்றவும், நீர் வழங்கியுள்ள பொறுப்புகளை நன்றியுணர்வுடன் நிறைவேற்றவும் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. அன்பின் உறைவிடமே இறைவா,**

அமைதியற்ற இந்த உலகில் உமது அன்பை விதைக்கும் கருவிகளாக உலக நாடுகளின் தலைவர்களை உருவாக்கி, உமது படைப்புகளை நன்றியுணர்வுடன் பாதுகாக்கும் திறனை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ள தந்தையே!**

நாம் உம்மிடமிருந்து கேட்ட நலந்தரும் வார்த்தைகளை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு. எமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக் கொள்ளவும் வேண்டிய நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. நலன்களின் ஊற்றே இறைவா,**

இவ்வுலகில் பல்வேறு நோய்களால் வருந்துவோர் நம்பிக்கையுடன் உம்மைத் தேடி வரவும், உமது குணமளிக்கும் வல்லமையால் நலம் பெற்று உமக்கு நன்றி செலுத்தவும் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. ஏழைகளைத் தூசியிலிருந்து தூக்கி நிறுத்துகின்றவரும்: வறியவரைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகின்றவருமான ஆண்டவரே!**

அடக்குமுறையின் வலைக்குள் அகப்பட்டுக் கண்ணீரோடும், கவலையோடும், வாழும் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர் அனைவரும் நீர் வழங்கும் விடுதலையைப் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.